செ.வெ.எண்:387/2009(செமதொஅ) நாள். 10.11.2009

<u>சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் வளர்ச்சிப் பணிகள் பற்றி விழிப்புணர்வு (கருத்தொளி) இயக்கம் குன்றத்தூரில் நடத்துகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் தகவல்.</u>

பாரத் நிர்மான் கருத்தொளி இயக்கம், மத்திய அரசின் நலத்திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் பத்திரிகைத் தகவல் அலுவலகம் கருத்தொளி இயக்கத்தை வடிவமைத்தது. இது நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசின் முக்கிய முன்னோடி திட்டங்கள் தொடர்பான தகவல்கள் உரிய பயனாளிகளை சென்றடைய வேண்டும் என்பது தான் கருத்தொளி இயக்கத்தின் இலக்கு. பாரத் நிர்மான் இயக்கத்தை நடத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. கடந்த 3 ஆண்டுகளாக பத்திரிகை தகவல் அலுவலகம், தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்தின் பல்வேறு ஊடக பிரிவுகளுடன் இணைந்து கருத்தொளி இயக்கத்தினை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தி வருகிறது. இதுவரை 22 கருத்தொளி இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

தற்போது குன்றத்தூரில் இம்மாதம் 17 முதல் 21ந் தேதி வரை கருத்தொளி இயக்கம் நடைபெறவுள்ளது. இந்த கருத்தொளி இயக்கத்தில் மத்திய தகவல் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு.எஸ்.ஜெகத்ரட்சகன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா மற்றும் உள்ளாட்சித்துறை பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். இந்த கருத்தொளி இயக்கம் சிறப்பாக நடத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூட்டரங்கில் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தென் பிராந்திய கூடுதல் இயக்குநர் (பொது) திரு.கே.எம். ரவீந்திரன், உதவி இயக்குநர் திரு.எம்.தெரஸ்நாதன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கருத்தொளி இயக்கம் குன்றத்தூரில் 5 நாட்கள் நடத்த தீர்மானிக்கப்பட்டது. இந்த கருத்தொளி கண்காட்சியில் சுமார் 60க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்படவுள்ளன. அந்த அரங்குகளில் மத்திய-மாநில அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், முன்னோடி வங்கிகள், காப்பீடு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், இளைஞர் அமைப்புகள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் போன்ற பல அமைப்புகள் பங்கேற்கின்றன. களவிளம்பரத்துறை சார்பாக படப்பை மற்றும் திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியங்களில் 20 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த கிராமங்களில் அரசுத்திட்டங்கள் குறித்து விளக்கி கூறப்பட உள்ளன.

இந்த கண்காட்சியில் மாவட்டத்தில் உள்ள அரசுத்துறைகள் கலந்து கொண்டு கண்காட்சியில் சிறப்பாக அமைக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இந்த கண்காட்சி சிறப்பாக அமைய அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் ஒத்துழைக்க வேண்டும் என திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்